# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1640/31 - 2010 පෙබරවාරි 12 වැනි සිකුරාදා - 2010.02.12

*1640/31 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின் கீழ் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தைத் தாபித்தல்

அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் பந்தி (1) (அ) என்பதன் கீழ் தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சரின் கீழ் வருகின்ற வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, வேலைவாய்ப்புத் திட்டமிடல், வேலைவாய்ப்பும் தொழிற் சந்தைத் தகவலும், தொழில், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், மீள் வேலைவாய்ப்புக்கான பயிற்சி என்பவற்றின் விடயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007, சனவரி 29 ஆந் திகதிய 1482/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையினால் அறிவிக்கப்பட்டுள்ளதாலும், 2009, திசெம்பர் 26 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் விளைவாக தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சர் கௌரவ அதாவுத செனவிரத்ன அவர்களால் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தைத் தாபிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 2009.08 12 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் ஆக்கப்பட்ட 09/1527/340/028 தொடர்பிலக்கத்தைக் கொண்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்தினால், தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின் கீழ் மனிதவலு, வேலைவாய்ப்பு திணைக்களம் 2010, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறுதிபெறும் வகையில் தாபிக்கப்பட்டுள்ளதென்பதை பொது மக்களிற்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின் வேலைவாய்ப்புப் பிரிவின் கீழ் இதுவரை செயற்படுத்தப்படுகின்ற விடயங்களான -

தேசிய மனிதவலு, வேலைவாய்ப்புக் கொள்கையை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்துதலும்,
வேலைவாய்ப்பினை உருவாக்குதலும் ஊக்குவித்தலும்,
தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்,
தொழிற் சந்தைத் தகவலைத் திரட்டுதல், பகுத்தாராய்தல் மற்றும் பரப்புதல், தொழில் இல்லத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் அத்துடன் மேலேயுள்ள விடயங்களுடன் தொடர்புபட்டுள்ள அனைத்து அல்லது இடைநேர் விளைவான விடயங்கள்

2010, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறுதிபெறும் வகையில் மனிதவலு, வேலைவாய்ப்பு பணிப்பாளர் அதிபதியின் பணிப்புரையின் கீழ் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படும்.

திணைக்களத்தின் முகவரி :

பணிப்பாளர் அதிபதி,
மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்,
இல. 64, பிரதான வீதி,
பத்தரமுல்லை.

மஹிந்த மடிகஹேவா,
செயலாளர்.

தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சு,
தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
2010, பெப்புருவரி 10.

02-730

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.